★ வறுமையே கம்யூனிசத்தின் விளைநிலம் ★

Phone No 4502

விலை அரை அணா

Regd. No. M. 5458

இலங்கை 5 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A.

MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (21—6—50) வெளியூர் (22—6—50) [இதழ் 284

மக்களின் வாழ்க்கைத்தரம் உயராத வரை கம்யூனிஸத் தொல்லை தீராது

(-)

ஆசியாவின் அல்லல் தீர - அடிப்படையில் மாற்றம் தேவை

.........(—).........

சர். ஏ. இராமசாமியார் கருத்துரை

" கம்யூனிசம் என்றால் என்ன? வறுமையின் விளைவுகள் தானே கம்யூனிசமாகக் காட்சியளிக்கிறது. மக்களுடைய வாழ்க்கைத்தரம் உயர்ந்து, அவர்களுக்குச் சுகாதார வசதி, கல்வி வசதி முதலியன ஏற்பட்டுவிட்டால் கம்யூனிஸ்டு பிரச்னையே தீர்ந்து போகும். ஆசிய நாடுகளில் அவல நிலையும் மாறிவிடும் "

" ஆசிய நாடுகளில் காணப்படும் கம்யூனிஸ்டுத் தொல்லைகளைத் தீர்க்க, பாகிஸ்தானோ மாகாடு ஏதேனும் திட்டம் தயாரித்துள்ளதா?" என்று, பத்திரிகை நிருபர் ஒருவர் சர் ஏ. இராமசாமி அவர்களைக் கேட்ட கேள்விக்கு, அவர் அளித்துள்ள பதில்தான் மேலே தரப்பட்டிருப்பது.

கேள்வி கேட்ட நிருபர், பதிலைத்தான் எதிர்பார்த்திருப்பார். ஆனால், ஆற்காட்டார் அளித்தது பதில் அல்ல; கேள்வி கேட்டவரே திகைக்கிடும் வண்ணம் ஒருமாற்றுக் கேள்வியைப்போட்டார். 'கம்யூனிசம் என்றால் என்ன'? என்று அங்ஙனம் ஒரு கேள்வியை கிளப்பிவிட்டு, வறுமையின் விளைவே கம்யூனிசம், என்று சுருங்கச் சொல்லி விளங்க வைக்கிறார்.

அவர் மேலும் பேசுகையில், 'மக்களுடைய வாழ்க்கைத் தரம் உயருவது' சுகாதார வசதி, கல்வி வசதி முதலியன சரி செய்யப்பட்டால், கம்யூனிஸ்ட் பிரச்னை எளிதில் தீர்ந்துவிடும் என்றும் தெளிவாகக் கூறுகிறார்.

தோழர் இராமசாமியார் சர்வதேச அரசியலில் ஒரு முக்கியஸ்தராக விளங்குகிறார். எனவே, சூழ்நிலைக்கேற்றவாறு சொல செயல்திறமையுடைவற்றில் முதலாளித்வ வலைமுறை முதலிய விசலாம் னால் உலக நிலையை உணரும் ஆற்றல் அவரிடம் இல்லாமற் போகும் என்று சொல்லிவிடமுடியாது அவர் ஓர் அரசியல் அறிஞர் என்ற முறையிலே—பொருளாதாரம் தெரிந்தவர் என்ற முறையிலே பொதுவுடைமைத் தத்துவத்தின் அவசியத்தை நன்கு உணர்ந்திருக்கிறார் என்பதில் அட்டியில்லை. எனவேதான், கேள்வி கேட்ட நிருபரை மாற்றுக் கேள்வி போட்டு மருட்டியிருக்கிறார். இந்த அளவிலே ஆற்காட்டாரின் அறிவுத்திறனையும், ஆற்றலையும் பாராட்ட வேண்டியதுதான். ஆனால், தமக்குச் சரியெனப்படும் ஒரு திட்டத்தை உருப்பெறச்செய்வது எப்படி என்பதற்கு, தோழர் இராமசாமி போன்றோர் வழிவகை காட்டாது, தம்முடைய நிலையினை மட்டும் சரி செய்துகொண்டுபோவது முறையல்ல.

மக்களுடைய வாழ்த்தரம் உயரவேண்டும், சுகாதாரம் பெருகவேண்டும், கல்வி வளர வேண்டும். இவைதான் சர் இராமசாமியார் விரும்புவனவானால், இவற்றை நிலை நிறுத்துவது எங்ஙனம், என்

(2-ம் பக்கம் பார்க்க)

தென்னாப்பிரிக்காவை வெளியேற்றுக!

காமன்வெல்த் நாடுகளுக்கு தெ. ஆ. இந்தியர் வேண்டுகோள்

ஜூன் 26-ல் தேசீய கண்டன தினம் கொண்டாட முடிவு

ஜோகன்னஸ்பர்க் ஜூன் 18— தென் ஆப்பிரிக்கா தனது கொள்கையை மாற்றிக்கொண்டு, வெள்ளையரல்லாத மக்களுக்கு இழைத்துள்ள கொடுமைகளை அகற்றுவிட்டால், அதைக் காமன்வெல்திலிருந்து வெளியேற்றுமாறு, டிரான்ஸ்வால் இந்தியர் காங்கிரஸ் காரியக் கமிட்டி, எல்லாக் காமன்வெல்த் பிரதமர்களுக்கும் தந்தி யனுப்பியிருக்கிறது.

கமிட்டியின் அவசரக் கூட்டம் ஒன்றில், அதன் தலைவர் டாக்டர் யூசுப்தாது கொண்டு வந்த ஒரு தீர்மானம், ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்ட பிறகு, இந்தத் தந்திகள் அனுப்பப்பட்டன.

தென் ஆப்பிரிக்கசர்க்காரின் இனபேதக் கொள்கைகள், காமன்வெல்தில் உள்ள லட்சக்கணக்கான மக்களின் உணர்ச்சிகளுக்கும் அபிலாஷைகளுக்கும் விரோதமாக இருக்கிறது என்றும், இந்தக் கொள்கைகள் காமன்வெல்தை ஒரு ஆக்ரமிப்புக் கருவியாக்கிவிட்டன என்றும், எனவே, இதர காமன்வெல்த் நாடுகள் தென் ஆப்ரிக்காவின் இன பேதக் கொள்கையைச் சகித்துக்கொண்டிருக்கக் கூடாது என்றும் அத்தீர்மானம் கூறியது.

உத்தேச வட்டமேஜை மாநாட்டில், இந்தியாவைப் போலவே, கலந்துகொள்ள மறுத்துவிடும்படி கமிட்டி பாகிஸ்தானைக் கேட்டுக் கொண்டிருக்கிறது.

தென் ஆப்பிரிக்காவில் ஒடுக்கப்படும் மக்களுக்கு தங்கள் பலத்த ஆதரவை அளித்து ஐ. நா. வில் அவர்களுக்குச் சாதகமாகத் தங்கள் செல்வாக்கைப் பயன்படுத்துமாறும் கமிட்டி எல்லா ஆசியநாடுகளுக்கும் வேண்டுகோள் விடுத்தது.

சீனாவுக்கு வேண்டுகோள்

மசோதாவினால் தென் ஆப்பிரிக்காவில் உள்ள சீனசமூகத்தவரும் பாதிக்கப்படுவர் என்று தெரிவித்து, தென் ஆப்பிரிக்கப் பாசிசத்தை ஆட்சேபிக்கும் உலககண்டனத்தில், சீனமக்கள் குடியரசும் தீவிர பங்கெடுத்துக் கொள்ள வேண்டும் என்று கமிட்டி வேண்டுகோள் விடுத்தது தென் ஆப்பிரிக்க சர்க்கார் — கொள்கைகள் உலக சமாதானத்திற்கே ஆபத்து என்று குறிப்பிட்டு, ஜனநாயகத்தை விரும்பும் நாடுகள் அனைத்தும், ஐ. நா. வில் தங்கள் பிரதிநிதிகள் மூலமாக அதன் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கமிட்டி தெரிவித்திருக்கிறது.

ஜூன் 26-ந் தேதியைத் தென் ஆப்பிரிக்காவின் சரித்திரத்திலேயே, மிகப்பெரிய கண்டன தினமாகக் காட்டும் முறையில், டிரான்ஸ்வால் இந்தியர்கள் அனைவரும் அன்று வேலைக்குப் போகாமலும், குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்பாமலும் இருக்க வேண்டும் என்று டிரான்ஸ்வால் இந்தியா காங்கிரசின் நெருக்கடி காரியக்கமிட்டி நேற்று வேண்டுகோள் விடுத்தது.

மலேயாவில் மொழித்தொல்லை

—(...)—

கணக்குகளை ஆங்கிலம், அல்லது மலாய் மொழியில் எழுதவேண்டுமாம்

—(:0:)—

இந்தியர், சீனர், இலங்கையர் எதிர்ப்பு

கோலாலம்பூர், ஜூன். 19— இங்கிருக்கும் இந்திய, பாகிஸ்தான், இலங்கை, சீன முதலிய சில்லறை வியாபாரிகளுக்கெல்லாம், பெரிய கஷ்டத்தை விளைவிக்கும் புதிய முறையொன்றைசட்டமாகச் செய்ய, மலேயா சர்க்கார் யோசித்து வருகிறது. இந்த வர்த்தகர்கள், தங்கள் கணக்குகளையெல்லாம் இனி ஆங்கிலத்திலோ அல்லது ஆங்கில எழுத்துக்களாகிய மலாய் மொழியிலோதான் எழுதி வைக்க வேண்டும் என்பதே இந்த சர்க்கார் கொண்டுவர யோசித்திருக்கும் சட்டம்.

மலேயா பெடரல் சட்டசபையில் கொண்டுவரப்பட்டிருக்கும் இம்மசோதாவுக்கு, எதிர்ப்பு பலமாக இருக்கிறது. எனினும் மசோதா சட்டசபையில் இரண்டாம் முறையாக விவாதிக்கப்படும் கட்டத்தில், இப்பொழுது இருப்பதோடு, செலக்ட் கமிட்டியின் பரிசிலனையிலும் இருந்துவருகிறது.

ஐரோப்பாவுக்கு புதுரக அமெரிக்க ஆயுதங்கள்

வாஷிங்டன், ஜூன் 20— மேற்கு ஐரோப்பியநாடுகளுக்கு ஆயுத உதவி திட்டத்தின் ஒரு பகுதியாக மெஷின்கன், கனரக ஆயுதம் செய்யும் விமானங்கள் முதலியன அமெரிக்காவிலிருந்து அனுப்பிவைக்கப்படும் என்று தெரிகிறது.

இப்புது ஆயுதங்களைப் பற்றி என்னதான் ரஷ்யாவிற்குத் தெரிந்தாலும், இதைத் தயாரிக்கும் வசதிகளோ அல்லது திறமையோ ரஷ்யாவுக்கு இல்லை என்று சொல்லப்படுகிறது. மேற்கு ஐரோப்பிய நாடுகளின் பாதுகாப்புக்காகவே தயார் செய்துகொண்டிருக்கிறதேயன்றி படையெடுப்புக்காக என்றும் இதை நோக்கத்தில் கொண்டே புதுரக ஆயுதங்கள் தயாரிக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

ரஷ்யாவின் மிகப்பலமுள்ள டாங்கிகளை இரண்டுபேர் உபயோகித்து, நாசம் செய்யக்கூடிய ஒரு புதுக்கருவி கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

இந்தியா-பாகிஸ்தான் ரூபாய் மதிப்பு தகராறு

.........(:—:).........

உலக நிதி ஸ்தாபனம் இதை தீர்த்துவைக்க வேண்டும்

.........(—).........

பிரிட்டிஷ் பத்திரிகை யோசனை

லண்டன், ஜூன் 20— இந்தியா-பாக்கிஸ்தான் ரூ மதிப்பு தகராறினால், இருநாடுகளின் நலனும் பாதிக்கப்படும் என்றும், நாளடைவில் நிலைமை சீர்படும் என்று விட்டு வைக்காமல், சர்வதேச நிதி ஸ்தாபனம் இத்தகராறைத் தீர்த்து வைக்க முன்வர வேண்டும் என்று, 'ஸ்டேடிஸ்ட்' என்ற பிரிட்டிஷ் வாரப்பத்திரிகை கூறுகிறது.

இந்திய ரூபாய் நாணயத்துடன் ஒப்பிடும்போது, பாக்கிஸ்தான் நாணயம் அதிக மதிப்புடையதாக இருந்தால், இதர நாணயங்களுடன் ஒப்பிடும் போது பாக். நாணயம் அதிக மதிப்புடையதாகவே தான் இருக்கும். ஆகவே, பாகிஸ்தான் தன் நாணய மதிப்பைக் குறைக்க வேண்டும், அல்லது இந்தியா வாங்கக் கூடிய அளவுக்குத்தன் விலைவாசிகளை பாக்கிஸ்தான் குறைக்க வேண்டியிருக்கும். ஆனால், இது ஏற்படும் வரை காத்திருப்பது, இருநாடுகளின் நலன்களும் பாதிக்கப்படும்,

மாலை மணி

சென்னை 21—6—50 புதன்கிழமை

டிராம் கட்டணம்

'காருண்ய மிகுந்த' காங்கிரஸ் அரசாங்கத்தில், எது வளர்ந்தாலும் வளராவிட்டாலும், வரிகள் மட்டும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வருகின்றன.

வரிகள் போடுவது என்பது, காங்கிரஸ் ஆட்சியில் மிகப் பெரிய சாதனையாக இருந்து வருகிறது!

காங்கிரஸ்காரர்கள் நாடெங்கும் 'விடுதலை வீரர்'களாக பவனி வந்த காலத்தில், வரிகளைக் குறைப்போம், குறைகளைத் தீர்ப்போம், முடியுமானால் வரிகளே கூட இல்லாமற் செய்வோம் என்று வீராப்புப் பேசித் திரிந்தனர். ஆட்சிப்பீடம் ஏறியதற்குப் பிறகு, அவர்கள் போடாத வரி ஏதும் இல்லை என்று சொல்லும்படியான அளவுக்கு, வரிகளின் தொகை மிதந்துவிட்டது. எல்லாம் சேர்ந்து ஏழைகளின் முதுகைத் தான் முறிக்கின்றன!

உள்ள வரிகளை உயர்த்துவது, புதிய புதிய வரிகளைப் போடுவது, தபால்—தந்தி—போக்குவரத்துச் சாதனக் கட்டணங்களை உயர்த்துவது ஆகியவைகளைத் 'தேசிய கைங்கரியங்களாக'க் கொண்டு ஆண்டு வருகின்றனர் இன்றைய ஆளவந்தார்கள்.

அரசாங்கம் போடும் எந்த வரியானாலும் உயர்த்தும் எந்த கட்டணமானாலும் இறுதியில் அவைகள் ஏழைகளைத்தான் வளைத்து, வதக்கி, வாட்டுகின்றன. பணக்காரர்களுக்கோ, தொழில் முதலாளிகளுக்கோ, வியாபாரிகளுக்கோ போடும் வரிகளால், அவர்கள் பாதிக்கப்பட்டுப்போய்விடுவதில்லை. ஏனென்றால், அவர்கள், தாம் செலுத்திய வரியையெல்லாம், வேறு வழிகளில் ஏழைகளின் தலையில் வைத்துக் கறக்கவேண்டிய அளவுக்குக் கறந்து கொண்டுவிடுகிறார்கள். ஏழையின் முதுகு முறிவதுதான், எந்த வரிச்சுமையினாலும் ஏற்படும் முடிவாகும்—பணம் படைத்தோர்க்கு எவ்விதக் கஷ்டமுமில்லை, நஷ்டமுமில்லை.

வறுமை என்னும் குளவியால் கொட்டப்பட்டுக் கொட்டப்பட்டு, வரிச்சுமை தாங்கமாட்டாமல் வாட்டமுற்றுக் கிடக்கும் ஏழை மக்களே, இன்றைய அரசாங்கத்தால் மேலும் மேலும் வஞ்சிக்கப்படுகிறார்கள். இதற்கு ஏற்ற எடுத்துக்காட்டு ஒன்று வேண்டுமானால், சென்னையில் டிராம் கட்டணத்தை உயர்த்துவதற்கு அரசாங்கத்தார் அனுமதி அளித்திருப்பதே போதுமானதாகும்.

சென்னையில், டிராம் கட்டணம் மைலுக்கு முக்காலணா என்றிருப்பதை ஒரு அணாவாக, ஜூலை திங்கள் முதல் தேதியிலிருந்து உயர்த்திக்கொள்ள, சென்னை அரசாங்கம், சென்னை எலக்ட்ரிக் டிராம்வே கம்பெனியாருக்கு அனுமதி அளித்துவிட்டதாம். இந்தக் கொடுமை காங்கிரஸ் அரசாங்கத்தின் சாதனைகளில் ஒன்றாகும்!

சென்னையிலுள்ள டிராம்களின் ஊழல்களையும், அவற்றில் உழைக்கும் உழைப்பாளிகளின் உருக்குலைந்த வாழ்வினையும், அவற்றில் ஏறிச் செல்லும் பிரயாணிகள் படும் வேதனையையும், அவற்றினால் அவற்றின் முதலாளிகள் பெறும் கொள்ளை லாபத்தையும் எல்லோரும் நன்கறிவர். இப்படிப்பட்ட சூழ்நிலையில், டிராம் கட்டணம் மைலுக்குக் கால்அணாவாக உயர்த்தப்படுகிறது என்றால், அதற்கு என்ன பொருள்? பொது மக்களுக்கு வசதியாக இருக்கும்படி செய்பவா—இல்லவே இல்லை! உழைப்பாளிகளுக்கு அதிகக் கூலி தரும் பொருட்டா—அதுவும் இல்லவே இல்லை! டிராம்களைப் புதுப்பிப்பதிலேயோ, அதிகமாக்குவதிலேயோ, அதிக வசதிகளைச் செய்து தருவதிலேயோ, கூலிகளை உயர்த்துவதிலேயோ அக்கரை சிறிதும் செலுத்த முடியாத அளவுக்குக் கல் மனம் படைத்திருக்கும் முதலாளிகளிடம், மேற்குறித்தவாறு எவ்வாறு எதிர்பார்க்க முடியும்? டிராம்வே மூலம் கிடைக்கும் கொள்ளை லாபம் குறையாமலிருப்பதற்காகவும், சிறுதளவு வளர்ந்தோங்குவதற்காகவுமே அதிகக் கட்டணம் கேட்கின்றனர்! அதற்கு, அரசாங்கமும் சம்மதித்துவிட்டது!

டிராம்வேக்களில் என்ன வசதி செய்துவிட்டார்களாம், அதிகக் கட்டணம் கேட்கின்றனர் இப்பொழுது!

சென்னையில் இப்பொழுது ஓடிக்கொண்டிருக்கும் டிராம்களிலே, பெரும்பாலானவை ஓட்டை உடைச்சல்கள்! நல்ல நிலையிலுள்ள டிராமையே பார்ப்பது அதிசயக் காட்சிகளில் ஒன்றாக இருக்கிறது! அது செல்லும் வேகமோ சொல்லவேண்டியதில்லை, மணிக்கு நான்கு மைல்கள் அல்லது ஐந்து மைல்கள்! ஏழை எளிய மக்கள் ஏறிச் செல்லும் போக்குவரத்துச் சாதனமாக அது இருக்கும் காரணத்தால், அதற்காக மணிக்கணக்கில், நூற்றுக்கணக்கானவர்கள் குறிப்பிட்ட நிற்குமிடங்களில் காத்துக்கிடக்கவேண்டியவர்களாக இருக்கிறார்கள்! ஒவ்வொரு டிராமிலும் மக்கள் புளியடைத்ததுபோல் உள் அடைந்தும், வெளிப்பக்கங்களில் வௌவால் தொங்குவதுபோல் தொங்கிக்கொண்டும் செல்கிறார்கள்! இதன் பொருள் என்ன? குறைந்த வசதியை வைத்துக்கொண்டு அளவுக்குமேற்பட்ட முறையில் அதிகலாபம்பெறுகின்றனர்முதலாளிகள் என்பதுதானே! சில ஓட்டை உடைச்சல் டிராம்களை வைத்துக்கொண்டு, சென்னையிலுள்ள டிராம் பிரயாணிகள் அத்தனை பேர்களிடமிருந்தும் கட்டணங்களை வசூலித்து, அநியாயமான முறையில் லாபம் அடைகின்றனர் என்பதுதானே இன்றுள்ள நிலை! இப்படி முறையல்லாத முறையில் பெறும் லாபமும் போதாது என்று கருதி, கட்டணத்தை உயர்த்துகிறார்கள் என்றால், கொள்ளை லாபத்தைப் பகற்கொள்ளையாக கொள்ள நினைக்கின்றனர் என்பதுதானே பொருள்! இதற்கு அரசாங்கமும் துணையாக இருக்கிறது என்றால், இந்த அரசாங்கத்தை முதலாளிகள் சர்க்கார் என்று கூறாமல், வேறு என்ன பெயரிட்டு அழைக்க முடியும்?

சென்னையில் பணக்காரர்கள் தனிக் கார்கள் வைத்திருக்கிறார்கள்; சற்று வசதி குறைந்தவர்கள் பஸ்களில் செல்லுகிறார்கள்; டிராம்களில் செல்பவர்கள் காரோ, டாக்ஸியோ, ரிக்ஷாவோ, பஸ்ஸோ வைத்துக்கொள்ள முடியாத ஏழை எளியவர்களேயாவர்கள். டிராம் கட்டணம் உயர்த்தப்படுகிறது என்றால், ஏழைகளின் தலையில் கையை வைத்து வகைப்பட்ட வரையில் சுரண்டுவது என்பதைத் தவிர வேறொன்றும் இல்லை.

டிராம்களின் கட்டணம் இப்பொழுது இருப்பதே ஏழைகளுக்குப் பெருஞ்சுமையாக இருக்கும்போது அதனை மேலும் உயர்த்துவது என்பது அநியாயம்; சகிக்க முடியாதது; வேதனை தரக்கூடியது! இதற்கு ஆதரவு தரும் அரசாங்கத்தின் செயல், நாகரிகம் வாய்ந்ததும் ஆகாது!

உள்ளபடியே, இன்றைய அரசாங்கம் நாகரிக அரசாங்கமாக இருந்தால், டிராம்களின் வசதியைப் பெருக்கி, எண்ணிக்கையை அதிகப்படுத்தி, கட்டணங்களைக் குறைத்து மக்களுக்கு நன்மை செய்வதாக இருக்கவேண்டும். அது தான் போகட்டும், நல்லது செய்யவில்லை என்றாலும், கெடுதலாவது செய்யாமலிருக்கக் கூடாதா? ஏழையின் கண்ணீர் நாளுக்கு நாள் பெருகுகிறது; ஆகவே, வெள்ளம்வரும் முன் அணை கோலிக்கொள்வது நல்லது, அல்லது வெள்ளம் வராமற் செய்து கொள்வது நல்லது என்று அரசாங்கத்திற்கு எச்சரிக்கை செய்கிறோம். ஏழையின் கண்ணீர் "கம்யூனிசத்தை" வளர்க்கும் தன்மை வாய்ந்தது என்பதையும் தெரிந்து வைத்துக்கொள்வது நல்லது.

ஏழை அழுத கண்ணீர் அரசாங்கத்தைத் தேய்க்கும் படையாதலால், காங்கிரஸ் அரசாங்கம் கவனம் செலுத்தி டிராம்வே கட்டணத்தை உயர்த்துவதை நிறுத்தி, இருப்பதையும் குறைத்து நாட்டிற்கு நன்மை செய்ய முற்படுவது ஆட்சிக்கும் நல்லது; ஆட்சிப் பீடத்திலமர்ந்திருப்போர்க்கும் நல்லது!

வறுமையே...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பதுதான் அவர்களுக்குப் புரியவில்லை. டாலர் தானம் செய்வதன் மூலம், பிற்பட்ட நிலையிலுள்ள நாடுகளை வாழச் செய்துவிடலாம் என்று கருதுகிறது அமெரிக்கா. அத்தகைய அமெரிக்காவைச் சேர்ந்தவர்களின் ஆற்காட்டார் போன்றோரின் அறிவும், திறனும் வேலை செய்கிறது. அகல உலகத்தின் வாட்டத்தை அகற்றவல்ல ஆற்றல், டாலருக்குக் கிடையாது என்பதை அந்த அரசியல் அறிஞர்கள் உணரக்காணோம்.

டாலர் தானம் செய்வதன் மூலம், அணியின் அல்லலைத் தற்காலிகமாகத் தடுப்பது, தற்காலிக மருந்து போடுவது போலாகும். தற்காலிக மருந்துகள் நோயின் மூல காரணத்தை அகற்ற முடியாது. நோய் நாட, நோய் முதல் நாட, அது தணிக்கும் வழிவகைகளை காணவேண்டும். அதற்குள்ள ஒரு வழி, உடனடியாக சர்வதேச அரசியல் அறிஞர்களும் கூடி சமதர்ம திட்டத்தைத் தீட்ட வேண்டியதாகும். கம்யூனிசம் கூடாது என்று கருதுவோர், அதுபோன்றதொரு மாற்றுத் திட்டத்தைத் தயாரித்துக் காட்டட்டும். அதனை யாரும் தடை செய்வதில்லை. எப்படியோ உற்ற பயன் கிடைக்கவேண்டும். அதைத் தான் இன்று உலகம் எதிர்பார்க்கிறது. இதனை யார் நிறைவேற்றினாலும் சரி, எப்படி நிறைவேற்றினாலும் சரி, எந்தப் பெயரிலே நிறைவேற்றப்பட்டாலும் சரி. அதைப்பற்றி உலக மக்களுக்கு, சிறப்பாக ஆசிய மக்களுக்குக் கவலையில்லை. எப்படியோ இன்றுள்ள நிலைமையில் மாற்றம் காண வேண்டும். இந்த மாற்றத்தை உண்டுபண்ணவல்ல ஒரே வழி பொதுவுடைமைத் திட்டமே என்பதை மக்கள் உணருகின்றனர். இதனைத்தான், கம்யூனிசம் கடிதில் மக்கள் மன்றத்தில் இடம்பெற்று விடுகிறது.

இத்தகைய நிலையிலே டாலர் தானம் வழங்குவதன் மூலமே, அகில உலகப் பொருளாதாரப் பிரச்னையைத் தீர்த்துவிடலாம் என நினைப்பது கடலிலே புளியைக் கரைத்து, அதன் மூலம் கடல் நீரைப் புளிப்பாக்கிவிடலாம் என்று நினைப்பது போலவேயாகும். இத்தகைய திட்டம், இன்றுள்ள நிலைமை மாற்றிய அமைக்கவல்ல மாற்றுத் திட்டமாகாது. வெறும் ஏமாற்றுத் திட்டமேயாகும்!

இந்த ஏமாற்றுத் திட்டத்தை வகுத்துக்கொண்டு அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் முதலிய நாடுகள் எத்தனை தடவை கூடிக்கூடிப் பேசிப்போதிலும் பயனில்லை. அதுபோலவே, எத்தனை ஏராமசாமிகள் அதில் பங்கு கொண்டாலும் பயனில்லை. அரைத்த மாவையே அரைத்துக்கொண்டிருக்க வேண்டியதுதான். தோழர் இராமசாமியார் எதிர்பார்ப்பது போல வறுமை அகலாது; வாட்டம் தொலையாது; சுகாதாரம் கிட்டாது; கல்வி வளராது. இவை ஏற்படாத வரையில் அமைதி நிலவும் என்று எதிர்பார்ப்பதும் சற்று கடினமே.

எனவே சர்வதேச அரசியல் அறிஞர்கள் இது பற்றி சிந்தித்து ஒரு முடிவுக்கு வர வேண்டும். அமைதியான முறையிலே—ஜனநாயக அடிப்படையிலே—அமைதிக்குப் பங்கம் விளைவிக்காத முறையிலே இப்போதிருக்கின்ற நிலைமையை அடியோடு மாற்றி அமைத்து, எல்லோரும் இன்புற்றிருக்கும் வழிவகைகளைக் காண்பார்களாக!

அயல்நாடுகளுக்கு கடிதம், சிறு பார்ஸல், எக்ஸ்பிரஸ் பட்டுவாடா

சென்னை, ஜூன் 20—

ரிஜிஸ்தர் செய்யப்படாத கடிதங்கள், போஸ்ட் கார்டுகள், சிறு பார்சல்கள் முதலியவை எக்ஸ்பிரஸ் டெலிவரி மூலம், பின்கண்ட நாடுகளுக்கு அனுப்பலாம் என்பதை, இந்திய சர்க்கார் தெரிவித்திருக்கின்றனர்.

அவை: இலங்கை, கிரேட் பிரிட்டன், ஆஸ்திரேலியா, யுனைடெட் ஸ்டேட்ஸ் எகிப்து பிரான்ஸ், இந்தோ-சீனா, ஜிப்ரால்டர், மால்டா, அயர்லாந்து நார்வே, இந்தோனேஷ்யா, சயாம, ஸ்வீடன், ரஷ்யா, துருக்கி, போர்ச்சுகல் முதலியவை.

அயல்நாடுகளுக்கு அனுப்பும் இந்தக் கடிதம் போன்ற தபால்களுக்கு அவைகளுக்கு சாதாரணமாக எவ்வளவு ஸ்டாம்பு வேண்டுமோ, அதற்கு மேல் 6 அணா ஒட்டவேண்டும். இவை மீது, தபாலாபீஸின் அனுப்பும் இடத்திலேயே பூர்த்தியாக ஒட்டப்படவேண்டும் சிவப்பு நிற லேபிள் 'எக்ஸ்பிரஸ்' என்று போடப்பட்டிருப்பதைத் தபாலாபீசிலிருந்து பெற்று இதன் மீது ஒட்டவேண்டும்.

யு. எஸ்.-சில் புது செயற்கை ரப்பர்

பிட்ஸ்பர்க், ஜூன் 10—

அரசாங்கம் மிகவும் அவசியம் விட்ட சந்தையில் வராத செயற்கை ரப்பர் தயாரிக்கும் முறையை, யுனைடெட் ஸ்டேட்ஸ் கண்டுபிடித்திருக்கிறது.

இப்புது செயற்கை ரப்பர், இதுவரை தயாரிக்கப்பட்டுள்ள செயற்கை ரப்பரைக் காட்டிலும், மிகச் சிறந்ததென்று பரிசோதனையில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இப்புது ரப்பரை எவ்வளவு அளவுக்கு வேண்டுமானாலும் தயாரிக்கலாமாம். —ஜனோஸ்

உலக போலீஸ் தலைவர்கள் மாநாடு

லண்டன், ஜூன் 20—

இப்பொழுது ஹேகில் நடைபெற்றுவரும் சர்வதேச போலீஸ் கமிஷன் மாநாட்டில், கம்யூனிஸ்டுகளின் சதியிலிருந்து தப்புவது எப்படி என்பது ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

பிரஸ்ஸில் நடைபெற்ற கம்யூனிஸ்ட் தொழிலாளர் மாநாட்டில், இந்தியா துறைமுகங்களில் சதி வேலை செய்யும் திட்டம் பற்றி ஆலோசிக்கப்பட்டதாம். இத்தகைய சதித் திட்டங்கள் நடைபெறுமென்பது பற்றியே இப்பொழுது ஆலோசிக்கப்படுகிறது.

காஷ்மீர் எல்லையை எட்டிப்பார்க்கிறது கம்யூனிசம்

ஸிங்கியாங்கில் நிலைபெற ரஷ்யா முயற்சி

"டெய்லி டெலிகிராப்" தரும் தகவல்

லண்டன், ஜூன் 20—

காஷ்மீர் எல்லையை ஒட்டியுள்ள சீன மாகாணமான ஸிங்கியாங் இப்பொழுது அநேகமாக ரஷ்யாவின் ஆதிக்கத்தில் இருப்பதாகவே கூறலாம் என்றும், கிழக்கோடியில் தன் கவனத்தைத் திருப்பக் கால் ஊன்றிக்கொள்ளும் இடமாக ரஷ்யா இதைச்செய்துவருகிறதென்றும், தன் காஷ்மீர் நிருபர் எழுதியனுப்பியுள்ள தகவல்களை 'டெய்லி டெலிகிராப்' பத்திரிகை பிரதானமாக முன்பக்கத்தில் பிரசுரித்திருக்கிறது.

அவர் மேலும் கூறுவதாவது:- ஸிங்கியாங், இப்பொழுது ரஷ்யாவுக்கு வேண்டிய உலோகங்கள், எண்ணெய், இரும்பு, நிலக்கரி முதலியவைகளை அதிக அளவு சப்ளை செய்து வருகிறது.

இங்குள்ள 10 விமான நிலையங்களையும் ரஷ்யர்கள் உபயோகிக்கின்றனர். மேலும், சில விமான நிலையங்களை நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. இதனால் இந்தியா, பாகிஸ்தானிலுள்ள மிக முக்கியமான இடங்கள் இதன் ரேஞ்சுக்கு உள்வந்துவிடலாம்.

ஸிங்கியாங்கில் ரஸ்தாக்களும் ரயில்வேக்களும் போடப்பட்டு வருகின்றன. இவை பூர்த்தியானால், ஷாங்கே மூலம் ஸிங்கியாங் மாஸ்கோவுடன் இணைய வழி ஏற்பட்டுவிடும்.

ஸிங்கியாங்கிலுள்ள பாலைவனப் பிரதேசங்களில், இரகசிய ஆயுதங்களைப் பரிசீலித்துப் பார்க்க உத்தேசிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

மேற்கு நாடுகளுடன் யுத்தம் ஏற்பட்டு அவசர நிலைமை ஏற்பட்டால் பெரிய கனமான கைத்தொழில்களை ஸிங்கியாங்கிற்கு மாற்றிவிடவும், ரஷ்யாவுக்கு உத்தேசமிருப்பதாக அறிகுறிகள் காணப்படுகின்றன.

ஸிங்கியாங்கில் இந்த ஏற்பாடுகளெல்லாம் மிகவும் இரகசியமாகவே நடைபெறுகிறது என்றாலும், அங்கிருந்து வெளியேறும் அகதிகள் மூலம் இத்தகவல்கள் எல்லாம் கிடைக்கிறது என்றும், அந்த அகதிகளில் சிலர் ஸிங்கியாங்கின் மாஜி சர்க்கார் தலைவர்கள் என்றும் டெளண்டன் கூறுகிறார்.

கம்யூனிஸ்ட் கொடுமையிலிருந்து தப்பிவந்த ஸிங்கியாங் மாஜி கவர்னர் முகம்மது இமின் பக்ராவும் ஸிங்கியாங் சர்க்காரின் மாஜி பிரதமகாரியதரிசி இஸா யூஸுப்பும் தனக்குப் பூராதகவல்களைத் தெரிவித்து சில 'மேப்' (படங்கள்) களையும் காட்டியதாகவும் அவர் கூறுகிறார்.

ஸிங்கியாங்கில் கம்யூனிஸ்டு கொரில்லாக்களை எதிர்த்து, சுமார் 30000 டாக்ஸ்தானியர்கள் போராடி வந்தாலும் எதிர்ப்பு பலனற்றதாகவே இருந்துவருவதாகக் கூறப்படுகிறது என்று, டெளண்டன் கூறுகிறார்.

கலிபோர்னியாவில் கலப்பு மணம்

இந்திய பெண் ஸ்வீடிஸ் மாணவனை மணந்தார்

பம்பாயைச் சேர்ந்த டாக்டர் எச். எஸ். யோட் என்பவரின் மகளும் ஸ்டான்போர் பல்கலைக் கழகத்தில் பேக்டீரியாலஜி பயின்றுவருபவருமான தோழியர் மேதாபோட் என்பவர் கார்ல் எ வான் ஏசன் என்றும் ஸ்வீடனைச்சேர்ந்த மருத்துவ மாணவர் ஒருவரை சீர்திருத்த முறையிலே திருமணம் செய்துகொண்டார். திருமணத்திற்கு நூற்றுக்கு மேற்பட்ட பெரிய மனிதர்கள் வந்திருந்தனர்.

தோழர் வான் ஏசன் மணமகளை மூன்று ஆண்டுகட்கு முன் ஸ்டான்போர்டு மருத்துவப்பள்ளி விழா ஒன்றின் போது சந்தித்தாராம். அச்சந்திப்பே இத்திருமணமாகப் பின்னர் மாறிற்று.

திருமணத்திற்குப் பின் மணமக்கள் விமானம் மூலம் இந்தியாவுக்கு வந்தனர். மீண்டும் ஸ்டான்போர்டு பல்கலைக் கழகத்தில் கல்வி பயிலச் சென்றுவிடுவார்களென்த் தெரிகிறது.

நகர வாக்காளர் தொகை கவனிப்பு

சென்னை, ஜூன் 18—

நகரில் இன்று உபவாக்காளர்கள் ஜாபிதாவுக்காக, வாக்காளர் எண்ணப்பட்டனர். ஆயிரத்து 10 பேர் காலை 11-மணி முதல் மாலை 7-மணி வரை வீடுவீடாகச்சென்று வாக்காளர்களைக் கணக்கெடுத்தார்கள்.

இவ்வேலை, மாநகரம் முழுவதும் நடைபெற்றதாகத் தெரிகிறது.

நகரில் உள்ள வாக்காளர் கணக்கெடுப்பு நிலையங்களை சென்னை கலெக்டர் தோழர் வி. ஜி. சுப்ரமணியம் இன்று நிகழ்த்தினர். இன்று பாதி வேலை முடிக்கப்படும் என்றும் ஜூன் 25-ந் தேதி வேலை முழுவதும் பூர்த்தியாகிவிடும் என்றும் எதிர்பார்ப்பதாக அவர் கூறினர்.

இப்போது கணக்கெடுக்கப்படும் வாக்காளர் எண்ணிக்கை இம்மாத முடிவில் தெரியும் என்று கூறப்படுகிறது.

இனி நடப்பவை

மாகாண தொழிற் சங்க காங்கிரஸ், சென்னை நகர தொழிற் சங்கங்களின் கவுன்சில், சென்னை மாணவர் கழகம் முன்னேற்ற எழுத்தாளர் கழகம், மற்றும் முன்னணிய இயக்கங்களின் சார்பில், 21—6—50 மாலை 5-30 மணிக்கு திலகர்கட்டம் மைதானத்தில் எஸ். எஸ். எல். சி. பரீட்சையில் அதிகமான மாணவர்களைத் தேர்வு பெறாமல்செய்யப்பட்டிருப்பதைக் குறித்து கண்டனத்தைத் தெரிவிக்க ஒரு பொதுக்கூட்டம் நடைபெறும். பி. ஜி. இராஜகோபாலாச்சாரி, கே. வி. சுந்தரன், பி. ஏ. பழனி மற்றும் பலர் பேசுவர்.

இந்தியாவின் 8-ஆண்டு கிரிக்கெட் திட்டம்

லண்டன், ஜூன் 20—

அடுத்த எட்டாண்டுகளுக்கு இந்தியா இதர நாடுகளின் குழுவினருடன் கிரிக்கெட் டெஸ்ட்கள் ஆடுவது பற்றிய ஒரு திட்டத்தை, தான் தயாரித்திருப்பதாகவும் அதை லண்டனில் ஜூன் 27-ந் தேதி லார்ட்ஸ் கிரிக்கெட் மாநாட்டில் சமர்ப்பிக்கப் போவதாகவும், இந்திய கிரிக்கெட் கண்ட்ரோல்போர்டு தலைவர் தோழர் அந்தோனி டி மெல்லோ 'ருனோட்டர்' நிருபரிடம் கூறினார்.

தோழர் டிமெல்லோவின் திட்டமாவது:—

1950-51 இந்தியாவில் இரண்டாவது காமன்வெல்த் குழுவினர்.

1951-52 இந்தியாவில் எம். ஸி. ஸி. குழுவினர்.

1952 இங்கிலாந்தில் இந்திய குழுவினர்.

1953 (ஜனவரி முதல் ஏப்ரல் வரை) பிரிட்டிஷ் மேற்கு இந்தியத் தீவுகளில் இந்திய குழுவினர்.

1953-54 இந்தியாவில் ஆஸ்திரேலிய குழுவினர்.

1955-56 ஆஸ்திரேலியா, நியூஜிலாந்தில் இந்திய குழுவினர்.

1956-57 இந்தியாவில் நியூஜிலாந்து குழுவினர்

1957-58 இந்தியாவில் எம். ஸி. ஸி. குழுவினர்

1958 (பிற் குதி) இங்கிலாந்தில் இந்திய குழுவினர்

1958-59 இந்தியாவில் மேற்கு இந்திய குழுவினர்

இத்திட்டத்தில், தென்னாப்பிரிக்கா விடப்பட்டிருக்கிறது கவனிக்கத்தக்கது.

1955-56-ல் இந்தியா, நியூஜிலாந்தில் விளையாடச் செல்வது முதல் தடவையாகும்.

இந்தத் திட்டத்தில் எந்த மாறுதலும் ஏற்பட்டாலும், 1953-ல் மேற்கிந்திய குழுவினர் இந்தியாவுக்கு வருவது நிச்சயமானதாகும். இந்தியாவுக்கு வரும் காமன்வெல்த் குழுவில் லென் ஹட்டன் இருக்கலாம் என்று தெரியவருகிறது. ஜூன் 20-ந் தேதி டிமெல்லோ இந்தியாவுக்குப் புறப்படுகிறார்.

ஸ்டர்லிங் மதிப்பு உயருகிறது

லண்டன், ஜூன். 40

பிரிட்டிஷ் நிதிநிலைமையில் உலக நம்பிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

ஸ்விட்ஸர்லாந்திலும், பெல்ஜியத்திலும் ஸ்டர்லிங் மதிப்பு உயர்ந்திருக்கிறது, பிரிட்டிஷ் ஏற்றுமதிகள் அதிகரித்திருக்கின்றன. பிரிட்டன் டாலர் நிலைமை பற்றி நம்பிக்கை தொடர்டுகளில் ஏற்பட்டிருக்கிறது. —ருனோட்டர்

ஆப்பிரிக்காவுக்கு அதிக சைக்கிள்கள்

பர்மிங்காம், ஜூன், 20—

ஆப்பிரிக்கா வாசிகளின் இஷ்டத்திற்கு ஏற்றாற்போல் டிசைன்களை மாற்றிப் பர்மிங்காம் சைக்கிள் உற்பத்தியாளர் சைக்கிள்களை, தயாரித்திருப்பதால், ஆப்பிரிக்கா ஏராளமாக சைக்கிள்களை வாங்கிவருகிறது.

சென்றவருஷத்தில் மட்டும், 840100 சைக்கிள்களை ஆப்பிரிக்காவுக்கு, பர்மிங்காம் ஏற்றுமதி செய்திருக்கிறது. —ருனோட்டர்

தி. மு. கழகச் சொற்பொழிவுகள்

22 - 6 - 50

தஞ்சை :— சி. என். அண்ணாதுரை, பெத்தாம்பாளையம் பழனிச்சாமி, ஈ. வி. கே. சம்பத், கே. கே. நீலமேகம்

23 - 6 - 50

சீர்காழி :— சி. என். அண்ணாதுரை, பெத்தாம்பாளையம் பழனிச்சாமி, ஈ. வி. கே. சம்பத், கே. கே. நீலமேகம்

25 - 6 - 50

பவானி :— மு. கருணாநிதி, எஸ். அப்பாவு,

தி. மு. கழக பொதுக்கூட்டங்கள்

பேட்டூர்

பேட்டூர், ஜூன் 17—

4—6—50 மாலை 6 மணிக்கு பேட்டூர் பொதுஜன சேவா சங்க மைதானத்தில் தி. மு. க. சார்பில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் அ. சுப்ரமணியம் அவர்கள் தலைமை வகித்தார். தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள் திராவிட முன்னேற்ற கழகம் ஏன் ஏற்படுத்தப்பட்டது என்பதைப்பற்றியும், அதனால் ஏற்பட்டிருக்கும் நிலைமைகளையும், தற்கால அரசியல் நிலைபற்றியும் சுமார் 2 மணி நேரம் பேசினர். செயலாளர் நன்றிகூற கூட்டம் இனிது முடிந்தது.

வேலூர்

வேலூர், ஜூன் 1—

4-6-50-ல் கோட்டைவெளியில், நகர தி. மு. கழக சார்பில் ஓர் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. ஆரம்பத்தில் இசைதட்டுகளாலும், தோழர்களாலும் இசை விருந்து அளிக்கப்பட்டது. பிறகு தோழர் என். அண்ணல் தலைமை வகித்து சிறிது நேரம் பேசியபின், தோழர்கள் இளஞ்செழியன், ஆர்க்காடு பொன்னம்பலம் சிறிது நேரம் பேசிய பின், வ. ஆ. மாவட்ட செயலாளர் தோழர் பேராசிரியர் சுப்பிரமணியம் பாரத சபையிலுள்ள சில ஆபாசங்களை விளக்கி, அதனால் மக்களுக்கு உண்டாகும் கெடுதிகளையும் விளக்கிப் பேசினர். அடுத்துத் தோழர் ஈ. வி. பி. ஆசைத்தம்பி அவர்கள், சுதந்திரம் பெற்றதிலிருந்து காங்கிரஸ் சர்க்கார் நடத்திவரும் ஒருதலைப்பட்சமான ஆட்சியையும் மக்கள் ஆதரவு அற்ற காங்கிரஸ் இதுவரை நிலைத்து நிற்க பண மூட்டைகள் கோடிக்கணக்கில் பண உதவி செய்து வந்ததையும், நம் கழகம் நாட்டிற்கும், மக்களுக்கும் செய்துவரும் நற்சேவையையும் விளக்கி, காங்கிரஸ் தோழர்களும் ஒப்புக்கொள்ள வேண்டிய விதத்தில் விளக்கி சுமார் 2 மணி நேரம் பேசினர். நன்றிகூற, கூட்டம் இனிது முடிவுற்றது.

சக்ரமல்லூர்

சக்ரமல்லூர் ஜூன் 15—

8-6-50 இரவு 9 மணிக்கு பெரும் பொதுக்கூட்டம் தி. மு. க. சார்பில், தோழர் இராமனுசம் அவர்கள் தலைமையில் நடந்தது. தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள், தி. மு. கழகத்தின் திட்டங்களையும், போக்கையும் விளக்கி 2 மணி நேரம் பேசினர். தோழர் மணிமொழியன் பொன்னம்பலம் ஆகியோர் சிறிதுநேரம் பேசினர். செயலாளர் நன்றி கூற கூட்டம் இனிது முடிவுற்றது.

வ. ஆ. ம. தி. மு. க. செயற்குழுகூட்டம்

வ. ஆ. தி. மு. க. செயலாளர்களுக்கும், மாவட்ட கழக உறுப்பினர்களுக்கும்

வட ஆர்க்காடு மாவட்ட மாநாடு ஆம்பூரில் இம்மாதம் 24, 25 தேதிகளில் (சனி, ஞாயிறு) நடக்கவிருக்கிறது. ஷை மாநாட்டுப் பந்தலிலே 25-6-50 தினம் காலை 8-மணிக்கு, மாகாண அமைப்புக்குழு செயலாளர் தோழர் என். வி. நடராசன் அவர்கள் தலைமையில், நமது மாவட்ட கழகக் கூட்டம் நடைபெறும். அதுபோது அடியிற்கண்ட பொருள்பற்றி ஆலோசிக்கப்படும்.

பொதுச் செயலாளர் தோழர் அண்ணாதுரை அவர்களைக் கொண்டு, நமது மாவட்டத்தில் சுற்றுப்பிரயாணம் செய்ய ஏற்பாடு செய்தல்.

எல்லாக் கிளைக்கழகங்களும், உறுப்பினர்கள் சேர்க்கவேண்டிய விஷயம்.

மாகாண மத்தியநிலைய நிலைய கட்டிட நிதி விஷயம்.

வரவு, செலவுகணக்கு பரிசீலனை செய்தல்.

செயலாளரால் கொண்டுவரும் இதர தீர்மானங்கள்.

கே. சுப்பிரமணியன்
செயலாளர்

குறிப்பு: 1. எல்லா திராவிட முன்னேற்றக் கிளைக்கழகச் செயலாளர்கள் என்னிடத்திலும், திருப்பத்தூர் தோழர் எம். நடேசம் அவர்களிடமும் பெற்றுச் சென்ற உறுப்பினர்களைச் சேர்க்கும் ரசீது புத்தகங்களும், மாவட்டக் கழகத்திற்குச் சேரவேண்டிய உறுப்பினருக்கு ஒரு அணா வீதக்கட்டணமும் சேர்த்த ரசீது புத்தகங்களும், சேர்க்காத ரசீது புத்தகங்களும் மாநாட்டுப் பந்தலில் தனியாக அமைத்திருக்கும் மாவட்ட தலைமை நிலையத்தில் அவசியம்கொண்டுவந்து கொடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

2. கிளைக் கழகங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட கழக உறுப்பினர்கள் வருட சந்தாரூ 5 வீதம் மாநாட்டுப் பந்தலில் என்னிடம் சேர்ப்பித்து, ரசீது பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

3. மற்ற விபரங்களை மாநாட்டுப் பந்தலில், தனியாக அமைத்திருக்கும் மாவட்ட தலைமை நிலையத்தில் கேட்டு தெரிந்துகொள்ளலாம்.

பயங்கரவாதிகள் நடவடிக்கை குறைகிறது

லண்டன், ஜூன் 20—

ஐரோப்பில் குறிப்பாக மலேசியாவில் எதிர்த்துவரும் தீவிர நடவடிக்கைகள் காரணமாக, அங்கு பயங்கரவாதிகள் நடவடிக்கை மிகவும் குறைந்துவருகிறது. புது போலீஸ் கோட்டடிகள் பல எழுப்பப்பட்டிருக்கின்றன. —ருனோட்டர்

கழக நடவடிக்கைகள்

கோவை:—13—6—50 இரவு தென் கோவை, தி.மு. கழகத்தின் சார்பில் ஓர் பொது உறுப்பினர் கூட்டம், தோழர் அ.ச. நடராசன் தலைமையில் நடைபெற்றது. அது போது, முன்னுள்ள செயற்குழுவைக் கலைத்துவிட்டு புதிதாக ஓர் செயற்குழுவும், ஏனைய செயற்குழுவும் தேர்ந்தெடுக்கப்பட்டது. செயலாளர்:—திருவேங்கடம்; துணைச்செயலாளர்கள்: கண்ணையன், குருநாதன், பொருளாளர்:-பி.வே. முத்து, விளம்பர உறுப்பினர்:—தி. சண்முகம், ஏனைய செயற்குழுவினர்:—எஸ். ஏ. ராசமாணிக்கம், ராசப்பன், விசுவநாதன், சுப்ரமணியம், கோபால், சொக்கலிங்கம், துரை, தங்கவேல், முத்து, எம். ராமலிங்கம், பழனியப்பன், நஞ்சப்பன், நாகமாணிக்கம், மஜீத், சரவணன், செகப்பண்ணன், கிருஷ்ணன், மணி, சின்னத்துரை

* * *

மேலக்கந்தண்டார்கோட்டை:—28-5-50 மாலை தி. மு. கழகச் செயற்குழுக்கூட்டம், தோழர் ஆர். முருகேசன் அவர்கள் இல்லத்தில் நடைபெற்றது. அதுபோது கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

12-2-50ல் நடைபெற்ற துவக்க விழா வரவு செலவு கணக்கு வாசித்து ஒப்புக்கொள்ளப்பட்டது. துவக்க விழா நன்கொடை வரவு ரூ. 104—4—0, செலவு 86-4-0 இருப்பு 18—0—0. இத் தொகை பதினெட்டும் செயலாளர் வசம் உள்ளது.

அடுத்து நடக்கவிருக்கும் உறுப்பினர்கள் கூட்டத்தில், பொதுக் கூட்டம் எப்பொழுது நடத்துவது என்று தீர்மானிப்பதாக தீர்மானிக்கப்பட்டது.

மேற்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டு, செயலாளர் நன்றிகூற, கூட்டம் இரவு 8-15 மணிக்கு இனிது முடிவுற்றது.

* * *

செம்பலம்:—15—6—50 காலை, செல்வம் தேவிர் இல்லத்தில் தி. மு. கழக நிர்வாகக் கமிட்டிக் கூட்டம் நடைபெற்றது, அதுபோது கழகப் பொதுச் செயலாளரின் தஞ்சை மாவட்டச் சுற்றுப் பிரயாணத்தின் போது, திருத்துறைப் பூண்டி பொதுக்கூட்டத்தில் வரவேற்புப்பத்திரம் வாசித்துக்கொடுப்பதென்றும், கழக அபிவிருத்திக்காக ஜூன் மாதம் முதல் உறுப்பினர்களிடம் இரண்டணா சந்தா வசூலிப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

• • •

முத்துப்பேட்டை:— 10-6-50 அன்றிரவு, தி. மு. கழக உறுப்பினர் தோழர் இரா. செங்கோல் அவர்கள் இருதயசெய்தியை முன்னிட்டு, தி. மு. கழகத்தின் சார்பில் வள்ளுவர் வாசகசாலையில் 14—6—50-ல் கூடி அன்னாரின் குடும்பத்தினருக்குத் தனது வருத்தத்தையும், ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறது என, தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

• • •

[illegible] அரந்தாங்கி:—புதிய நிர்வாக அமைப்பை முன்னிட்டு, தி. மு. க. கிளையின் உறுப்பினர்கள் கூட்டமொன்று ராஜன்ஸ் சோடா பாக்டரியில் 28—5—50 இரவு, தோழர் நடராசன் தலைமையில் நடைபெற்றது. தோழர் கனகசபை மணியத்தின் விலகல் ஒப்புக்கொள்ளப்பட்டது. பின்கண்டபடி நிர்வாக குழு மாற்றியமைக்கப்பட்டது. ப. நடராசன் செயலாளர்,

மாவட்ட கழகத்திற்கு ப. நடராசனும், கோ. வீராசாமியும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். ப. நடராசன், தற்காலிக பொருள் உறுப்பினர். அ. கி. கோவிந்தராசன் துணைச்செயலாளர், கோ. வீராசாமி விளம்பர உறுப்பினர், இ. உடையப்பன், ஏனைய செயற்குழுவினர்: இரா. சுப்பையா, இரா. சக்திவேலு, அ. பொ. அரைக்கண்ணன், கா. கந்தசாமி, ரா. கண்ணு, கே. ப. சதாசிவம், ப. சிவசாமி ஆகியவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். கழகக்கட்டிட நிதிக்குப் பண அனுப்புவதென்ற தீர்மானத்துடன், அ. கி. கோவிந்தராசன் நன்றி கூறிட நிர்வாக அமைப்புக் கூட்டம் முடிவுற்றது.

சென்னை திருவள்ளுவர் கழகம்

சென்னை, ஜூன், 1—

சென்னைத் திருவள்ளுவர் கழகத்தின் எழாம் ஆண்டு நிறைவு விழா, புரசை சர். எம். சி. டி. முத்தையசெட்டியார் உயர்நிலைப் பள்ளியில் 9—6—50, 10—6—50 ஆகிய இரு தினங்களில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. பேராசிரியர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், அவர்கள் தலைமை தாங்கினர். அதுபோது, ம. பொ. சிவஞானம், அ. ச. ஞானசம்பந்தம், பண்டிதை கிருஷ்ணவேணி அம்மையார், திரு. மா. சொக்கலிங்கம் ஆகியோர் பேசினர்.

பின்னர் கழகத் தலைவர் தோழர் அ. கி. பரந்தாமனார் எம். ஏ. அவர்கள், மதுரை தியாகராசர் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளர் பதவி ஏற்றமைக்காக பாராட்டு வாழ்த்து ஒன்று அளிக்கப்பெற்றது. கழகச் செயலாளர் ஆண்டு அறிக்கை படித்தபின், கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு, அரசாங்கத்தின் உரிய அதிகாரிக்கு அனுப்பப்பட்டன.

தீர்மானம்

(1) தமிழ் நாட்டில், தமிழ் மொழி, வட்டார மொழியாக இருந்தும், உயர்நிலைப்பள்ளிகளில் தமிழ் மொழியைக் கட்டாயமாகப் படிக்கத் தகுந்த பாட திட்டம் இல்லாதிருப்பதை மாற்றி, ஒவ்வொரு மாணவனும் கட்டாயமாகத் தமிழ் மொழியைப் படிக்கும்வகையில் ஆவனசெய்ய வேண்டுமென்று, சென்னை மாநில முதல் அமைச்சர் அவர்களையும், கல்வி அமைச்சர் அவர்களையும் இக் கூட்டம் அன்புடன் கேட்டுக்கொள்கிறது.

(2) கனம் கல்வி மந்திரி அவர்கள், ஒரு சிலகூட்டங்களில் தமிழ்ப் பண்டிதர்களையும், தமிழாசிரியர்களையும் பற்றிப் பேசுகையில் அவர்கள் பிற மொழி விரோதிகள் என்றும், அந்நகரையில் அவர்கள் குற்றவாளிகள் என்றும் நிருப்பிக்கத்த முறையில் அபிப்பிராயம் கூறியதைக் குறித்து, இக்கூட்டம் வருந்துவதுடன் இனி, அத்தன்மையான ஆதாரமற்ற விஷயங்களைப் பேசாதிருக்க கனம் கல்வி அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறது.

உலக குழந்தைகளின் கொடி

டமாஸ்கஸ், ஜூன் 20—

சர்வதேச குழந்தைகளின் கொடிக்கான டிசைனை தயாரித்துக் கொடுத்ததற்காக அட்னான் மசட்மாட்ரஜி என்கிற சிரிய மாணவனுக்குப் பரிசு கிடைத்திருக்கிறது. அந்த டிசைனில் இரு ஆலிவ் கிளைகள் ஒன்றுடன் ஒன்று பின்னிக்கொண்டிருப்பன போலவும் அதன் நான்கு கிளைகள் உலகிலுள்ள நான்கு ஜாதிகளைக் குறிப்பதுபோல வெள்ளை, கருப்பு, மஞ்சள், சிவப்பு ஆகிய நிறங்களுடன் கூடியிருக்கிறதாம். (ஞானப்)

பிரிட்டிஷ் - கிரீஸ் கடல் ஒத்திகை

ஏதென்ஸ், ஜூன் 20—

அயோனியன் கடலில் பிரிட்டிஷ் கிரீஸ் படைகளை கூட்டுக்கடல் ஒத்திகை இப்பொழுது நடைபெற்று வருகிறது. (ஞானப்)

வ. ஆ. மாவட்ட

தி. மு. கழக முதல் மாநாடு

ஜூன் 24, 25 சனி ஞாயிறுகளில்

ஆரணிக் கோட்டையில் நடைபெறும்

தலைவர்:—க. அன்பழகன்

துவக்குபவர்:—எம். எஸ். இராமசாமி

பொதுச்செயலாளரும், கழகச் சொற்பொழிவாளர்கள் பலரும் கலந்துகொள்வர்

★

24—6—50

சென்னை முன்னேற்ற நாடகக் கழகத்தார் நடிக்கும்

"கல்சுமந்தகசடர்" "வழக்குவாபஸ்"

(சி. என். ஏ.)

ஆகிய ஓரங்க நாடகங்கள் நடைபெறும்

25—6—50 இரவு

கே. ஆர். இராமசாமி, சி. என். ஏ. நடிக்கும்

"சந்திரமோகன்" நாடகம் நடைபெறும்

மாநாட்டுக் கட்டணம்:—

வரவேற்பாளர் ரூ. 5—0—0 :: பார்வையாளர் ரூ. 1—0—0

நாடகங்களுக்குக் கட்டணம் கிடையாது

உணவுக்கு இரண்டு நாட்களுக்கும் ரூ. 2—0—0

வரவேற்புக்குழுவினர்

பதிவுத் திருமணங்கள்

அருப்புக்கோட்டை, ஜூன் 15—

தோழர் சி. சந்திரான் எம். ஏ., பி. எல். அவர்களுக்கும், தோழியர் மகாலட்சுமி அம்மைக்கும் 11-6-50 அன்று பதிவுத் திருமணம் நடைபெற்றது.

திருமணப் பதிவுக்காக இராமநாதபுர மாவட்ட ஆவணப்பதிவாளர் வந்திருந்தார். மணமக்கள் தாலிகட்டும் சடங்கைத் தவிர்த்ததுடன், திருமண ஆவணப்பதிவில் தம்மை எந்த மதத்தையும் சேர்ந்தவர்களல்லர் என்று பதிவு செய்து கொண்டனர்.

அதே மணமேடையில், தோழர் வெ. இரத்தினத்திற்கும், தோழியர் மரியம்மாளுக்கும் தாலியில்லாத சீர்திருத்த மணம் நடந்தது. திருமணத்திற்கு வந்திருந்த நண்பர்களும், சுற்றத்தார்களும், வாழ்த்துக்களும், பரிசுகளும் ஏராளமாக இருதம்பதிகளுக்கும் வழங்கினர். தோழர் சி. சுப்ரமணியம் எம். ஏ. எல். டி., எஸ். எஸ். பழனிச்சாமி ஆகியோர். மணமக்களைப் பாராட்டிப் பேசினர். இதன் நினைவாக 5 ரூபாய் வரப்பெற்றோம். மகிழ்ச்சி!

(ஆ-ர்)

உணவுப்பொருள்களைக் கெடாது பாதுகாக்க அணுசக்தி

நியூயார்க், ஜூன். 20—

உணவுப் பொருள்களைக் கெடாமல் பாதுகாக்க, அணுசக்தி உபயோகிக்கப்படுவது சாத்தியம் என்று, சிகாகோ விஞ்ஞானிகள் மாநாட்டில் கூறப்பட்டது. —ஞானப்

தாராபுரம் தொகுதியில்

30—6—50ல் நடைபெறும்

சென்னை சட்டசபை தேர்தலில்

ஜனராஜ்ய கட்சி அபேட்சகர்

திரு. S. ரத்னசாமி கவுண்டருக்கு

பச்சைப் பெட்டியில்

தயவுசெய்து ஓட்போடவும்

(விளம்பரம்)

கொள்ளைக்காரன் பிடிபட்டான்

பாரிஸ், ஜூன் 20—

பிரான்ஸின் பிரபல கொள்ளைக்காரக் கூட்டத்தலைவனும், பிரான்ஸ் முழுவதுமே அவன் பெயரைக் கேட்டால் நடுங்கும்படியானவனுமான எமில்புஸ்லான், மீண்டும் கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டிருக்கிறான்.

இவன் இரு தடவை சிறையிலிருந்து தப்பிச் சென்றிருக்கிறான். இவனை மூன்று வருஷ காலமாக போலீஸார் தேடி வருகின்றனர். இதுவரை இவன் 15 தடவை தண்டிக்கப்பட்டிருக்கிறான். இவனை இரு போலீஸ் அதிகாரிகள் பட்டப் பகலில் மிக சாதுர்யமாக ஒரு ஹோட்டலில் கைது செய்தனர்.

தேவை

புது நடிகை, நடிகர், எழுத்தாளர், சித்திரக்காரர்கள் தேவை

ஸ்தாபிதம்: 10-10-49

ரிஜிஸ்டர் நெ. 20.

2 லக்ஷம் ரூபாய் மூலதன அடிப்படையில, லிமிடெட் சட்டப்படி ரிஜிஸ்டர் செய்யப்பட்டு, சர்க்கார் தணிக்கையின் கீழ் நடைபெற்று வரும் பத்திரிகை, டிராமா, சினிமா கம்பெனிக்கு புது நடிகர், நடிகை, எழுத்தாளர், சித்திரக்காரர்கள் தேவை. விபரங்கட்கு ½ முக்காலணா ஸ்டாம்புடன் விண்ணப்பிக்கவும்.

தமிழ்நாடு டாலெண்டெட் ஆர்டிஸ்ட் கார்ப்பரேஷன் மதுரை லிமிடெட்

புதூர் :: மதுரை.

அம்மான், ஜூன் 20—

முடக்கப்பட்ட ஸ்டெர்லிங் நிலைக் கணக்கிலிருந்து ஆஸ்திரிலிருந்து 200,000 பவுன் பிரிட்டன் ஜோர்டனுக்கு அனுமதித்திருக்கிறது என்று, ஜோர்டன் நிதிமந்திரி கூறினார்.

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty St, Madras-1.